DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 207/ 2021
*****

Deposition of Witness for Defence witness No: DW -2

| | | |
|---|---|---|
| Name | : | முருகராஜபூபதி |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 10.02.2026 |

2. **( Accused present)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**crmp No. 12/2025 மனுவானது அனுமதிக்கப்பட்டதின் பேரில் எதிரி தரப்பு சாட்சியாக விசாரிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பஞ்சம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது தம்பி ஆவார். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகள் வயதுக்கு வந்ததை சொல்வதற்காகஎதிரியும், எனது கணவரும், சென்ற போது எனது கணவர் மட்டும் திரும்பி வந்துவிட்டார். எதிரி அவரது மாமியார் வீட்டில் சொல்ல சென்றபோது மகேஸ் என்பவருடன் பிரச்சனை ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். 2018 ல் எதிரி வேறு சமுதாயத்தை சேர்ந்த பெண்ணை திருமணம் செய்ததால் பெண் வீட்டார்களில் ஒருவரான நல்லையா எதிரி மீது சம்பவத்திற்கு 5 மாதங்களுக்கு முன்பாக சிவகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். விசாரணைக்கு நானும், எதிரியும் சென்றிருந்தோம். காவல் நிலையத்தில் எழுத்தர்

செல்வகுமார் என்பவர் விசாரணைக்காக வேண்டி எதிரி மற்றும் எனது தொலைபேசி எண்ணை வாங்கி கொண்டார். மறுநாளில் இருந்து எழுத்தர் செல்வகுமார் விசாரைணை சம்மந்தமாக பேசுவது போல என்னிடம் தவறாக தொடர்ந்து தொலைபேசியில் அழைத்து பேச ஆரம்பித்தார். இது பற்றி எனது கணவரிடம் நான் சொன்னதின் பேரில் எனது கணவர் மேற்படி எழுத்தர் செல்வகுமாரை சத்தம் போட்டார். அதன் பின்னர் நானும், மேற்படி எழுத்தர் செல்வகுமார் போன் நம்பரை Block செய்து விட்டேன். இதன் காரணமாக மேற்படி எழுத்தர் செல்வகுமார் முன்விரோதம் கொண்டிருந்தார்.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி எழுத்தர் செல்வகுமார் நடவடிக்கை குறித்து அவரது மேல் அதிகாரிகளுக்கு புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி எனது உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியவாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரி எனது தம்பி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல எழுத்தர் செல்வகுமார் என்பவர் எந்த செய்கையிலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக காவலர் செல்வகுமார் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.